செ.வெ.எண். 9 நாள். 5.8.2011

**நலவாரியம் மூலம் அடையாள அட்டை பெற்றுள்ள திருநங்கைகளுக்கு அரசின் சலுகைகள் பெற்றுத் தரப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநங்கைகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மகளிர் திட்டத்தின் மூலம் திருநங்கைகள் 5 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து தீர்மானப்பதிவேடு, வரவு செலவு பதிவேடு பராமரிப்பதோடு 6-ம் மாத காலமாக செயல்பாட்டில் இருக்க வேண்டும். பிறகு குழுக்களிடையே தரம் பிரிக்கப்பட்டு அதனடிப்படையில் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு சிறப்பாக செயல்படும் குழுக்களுக்கு ரூ.15,000 வீதம் மானியமும், ரூ.50,000 வீதம் வழங்கிக்கடனும் வழங்கப்படுகிறது. இவற்றை பயன்படுத்தி கடனை தவறாது முறையாக திரும்ப செலுத்துபவர்களுக்கு பொருளாதாரக் கடன் 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை வங்கிக் கடனும், 1.25 லட்சம் வரை மானியமும் அரசு வழங்கி வருகிறது. இதுவரை அடையாள அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்கள் மொத்தம் 83 பேரில் 82 பேர் மட்டும் அடையாள அட்டை பெற்றுள்ளார்கள். இவர்களில் வாரிய அட்டை பெற்றுள்ளவர் அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா, குடும்ப அட்டை, தொகுப்பு வீடுகள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏற்கனவே 20 திருநங்கையர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு இவ்வாண்டு முதல் தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.



5.8.2011 - நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருநங்கைகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. அருகில் திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) திரு.அண்ணாமலை பிரேம்குமார் உள்ளார்.

மேலும் தமிழ்நாடு அரவாணிகள் நலவாரியம் மூலம் முன்னுரிமைகள் பெற அடையாள அட்டை பெற்றுள்ளவர்களுக்கு நகர்ப்புறத்தில் வீடுகள் கட்ட கடன் வசதியும், பஞ்சாயத்து பகுதியில் தொகுப்பு வீடுகளும் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திருநங்கையர்கள் பொருளாதாரத்தில் முன்னேறும் வகையில் தொழிற்பயிற்சிகளான தையல் பயிற்சி, சமையல் பயிற்சி, அழகு நிலையம் போன்ற பயிற்சிகள் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியின்போது மகளிர்திட்ட அலுவலர் திரு.அண்ணாமலை, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. சாந்தா, தாய்விழுதுகள் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் திருமதி. எஸ்.தேவி மற்றும் நாமக்கல் மாவட்ட திருநங்கைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.